பக்கங்கள் 4 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆவணி 2 றம்ழான் 2 இதழ்: 188
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 18-8-77

## தரப்படுத்தல் ரத்து! மந்திரிசபை முடிவு
### அரசியல் சட்ட மாற்றத்துக்கு நகல் சட்டம்

கொழும்பு, வியாழன் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப் படுவதற்கு இதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வந்த தரப்படுத்தல் முறை ரத்துச் செய்யப்படுகிறது. பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவுசெய்யப் படுவதற்கான வசதி செய்து கொடுக்கப்படும்.

இன்று நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் இந்த முடிவுசெய்யப்பட்டது.

**அரசியல் சட்டம்**

இப்போது நடைமுறையில் இருக்கும் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட நகல் ஒன்றையும் இன்று அமைச்சரவை ஏற்றுக்கொண்

(4-ம்பக்கம் பார்க்க)

# குருநாகல், அநுராதபுரம் பகுதிகளில் ஊரடங்கு அமுல்!

## வதந்திகளை நம்பவேண்டாம் அரசு வேண்டுகோள்

### மக்களை அமைதியாயிருக்க தமிழ்த் தலைவர்கள் கோரிக்கை

**அநுராதபுரம், குருநாகல் மாவட்டங்களில் இரவு 8 மணி முதல் காலை 5 மணி வரையிலான ஊரடங்குச் சட்டம் நேற்றிரவு முதல் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.**

இம்மாவட்டங்களில் சில பகுதிகளில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து இந்த நடவடிக்கையை அரசு எடுத்துள்ளது.

பொறுப்பற்ற சிலரால் பரப்பப்பட்ட வதந்திகளைத் தொடர்ந்து கொள்ளையடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதால் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்படுவதாக அரசு விடுத்த ஒரு அறிக்கை கூறுகிறது. வதந்திகளை நம்பி மக்கள் தவறான வழிகளில் செல்லக் கூடாதென்றும் இப்பகுதி மக்களுக்கு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## யாழ்.நகரில் அமைச்சரும் பிரதிஅமைச்சரும்

கலாச்சார அமைச்சர் திரு. ஈ. எல். பீ. ஹுருளேயும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் திரு. வீரப்பிட்டியாவும் நேற்றுமாலை விசேஷ விமானத்தில் யாழ்ப்பாணம் வந்தனர். இரண்டுநாள் கலவரத்தினால் யாழ். நகரில் பாதிக்கப்பட்ட சிலபகுதிகளை இவர்களிருவரும் பார்வையிட்டனர்.

பின்னர் அரசமாளிகையில் நடைபெற்ற ஒருமகாநாட்டில் அமைச்சர் ஹுருளே, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் திரு. வீரப்பிட்டியா, வடபிராந்திய உதவிப்பொலிஸ்மா அதிபர் திரு. அனா செனிவிரத்தின, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு.டபிள்யு ஏ. எல். விஜயபாலா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த மகாநாட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களான திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, திரு. வி. என். நவரத்தினம், திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இங்கும் ஊரடங்கு அமுலாகலாம்!

நீண்ட நேரம் இந்த மகாநாடு நடந்தது. யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு தினங்களாக நடைபெற்றுவரும் சம்பவங்கள் பற்றி இம்மகாநாட்டில் ஆராயப்பட்டது.

யாழ். நகரிலும் இப்போதைய சூழ்நிலைகளை ஆராய்ந்து சிலமணி நேரங்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் படலாமென்று அறியப்படுகிறது.

நாட்டின் இதர சில பகுதிகளிலும் இப்போது தோன்றியுள்ள நிலைமை பற்றியும் இந்த மகாநாட்டில் பிரதிஅமைச்சர் பிரஸ்தாபித்ததாகத் தெரிகிறது.

## இராசதுரை விசாரித்தார்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சம்பவங்களையிட்டு மட்டக்களப்பு முதல் பிரதிநிதி திரு. செ இராசதுரை தொலைபேசியில் நேற்றுத் தொடர்பு கொண்டு விசாரித்தார். இச் சம்பவங்களையிட்டு அவர் கவலையும் தெரிவித்தார்.

## அமைதியாக இருக்கத் தலைவர்கள் வேண்டுகோள்

மக்களை அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அசம்பாவிதங்களுக்கு இடங்கொடுக்காமல் நடந்துகொள்ளும்படியும் வீண் உயிர்ச்சேதத்துக்கும் பொருட்சேதத்துக்கும் இடம் கொடுக்காமல் நடந்துகொள்ளும்படியும் தலைவர்கள் கேட்டுள்ளனர். வீதிகளில் வீணை நின்று அசம்பாவிதங்களுக்கு இடமளிக்கவேண்டாமென்றும் கேட்டுள்ளனர்.

(4-ம பக்கம் பார்க்க)

## நேற்றுடன் மாண்டவர் தொகை நான்கேதான்!

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாண நகரில் கடந்த இரண்டு தினங்களாக நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களில் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டவர் தொகை நான்குதான். நேற்று முன்தினம் மூன்று பேரும், நேற்று நண்பகலில் ஒருவரும் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்.

நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களில் இருவரும், சடலங்கள் அடையாளம் காணப்பட்டுப் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

**ஆஸ்பத்திரியில்**

நேற்றுக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மெயில் ரயிலில் அநுராதபுரத்தில் நடந்த சம்பவத்தில் காயம் அடைந்து யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளவர்கள் விபரம் வருமாறு:

நடராசா – சர்வோதயவீதி, ஆவரங்கால்.
தர்மலிங்கம் – சபாபதிவீதி, கொக்குவில்.
ராஜு – தாவடி.
சுப்பிரமணியம் – பொன்னாலை, சுழிபுரம்.
அண்ணாச்சாமி – வசாவிளான்.
யோகராசா – உரும்பராய் தெற்கு.
சின்னத்தம்பி – 43, 37ம் ஒழுங்கை, கொழும்பு-6.

யாழ்ப்பாண நகரில் நடந்த சம்பவங்களில் நேற்று ஆஸ்பத்திரியில் காயங்களுடன் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 59ம் இலக்கத்தைச் சேர்ந்த கயிலாசபிள்ளை

[4-ம் பக்கம் பார்க்க]

## ★ கடைசிச் செய்தி
### பிரதமருடன் 'அமிர்' சந்திப்பு

கொழும்பு, வியா. எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச்செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் நேற்று விமானம் மூலம் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவை இவர்கள் நேற்று இரவு சந்தித்தனர். இச் செய்தி அச்சுக்கு போகும்வரை சந்திப்பு விபரம் எமக்குக் கிடைக்கவில்லை.

## அமைதியை நிலைநாட்ட பிரதமர் ஜே. ஆர். உறுதி
### சிவா—தொண்டமானுடன் சந்திப்பு

கொழும்பு, புதன் நிலைமையை விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதாகவும் நாட்டில் சட்டமும் அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுமென்றும் பிரதமர் ஜே. ஆர். ஜயவர்த்தன தம்மைச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரிடம் கூறியதாகத் தெரிகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எஸ். தொண்டமான் திரு. மு. சிவசிதம்பரம், திரு. எம். எஸ். செல்லச்சாமி ஆகியோர் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவை இன்று காலை சந்தித்துப் பேசினர். யாழ்ப்பாணத்தில் கடந்தஇரு தினங்களாக நடைபெறும் சம்பவங்கள் பற்றியும் அதன் காரணங்கள் பற்றியும் இவர்கள் எடுத்துக் கூறியதாகத் தெரிகிறது.

## சந்திரகாசனும் பறிகொடுத்தார்

கொழும்பு, புதன் யாழ்ப்பாணத்திலிருந்து மெயில் ரயிலில் நேற்று முன்தினம் இரவு பிரயாணம் செய்த அமரர் எஸ், ஜே. வி. செல்வநாயகத்தின் மகன் திரு. சந்திரகாசனும் அநுராதபுரம் ரயில்நிலையத்தில் நடந்த சம்பவத்தில் தமது கைக்கடிகாரம், மூக்குக் கண்ணாடி உட்பட தமது உடமைகளைப் பறிகொடுத்தார். அவர் தாக்குதலுக்குமுள்ளானார் என்றும் கூறப்படுகிறது.

## நிலைமை ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள பிரதிபாதுகாப்பு அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து தரும்படி தொழிற் சங்கங்களின் கூட்டுக்கமிட்டி செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் அரசாங்க அதிபரைக் கோரியுள்ளார்.

### ஆஸ்பத்திரி ஊழியர் சேவை

பொலிஸ் அட்டூழியத்தை எதிர்த்து யாழ். ஆஸ்பத்திரியில் கடமைபுரிபவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கியிருந்த போதிலும் முக்கிய சேவைகளை கைவிடப்படவில்லை.

வெளியில் தாக்குதல்களுக்குள்ளாகி சிகிச்சைக்கு வந்தவர்களுக்கு இவர்கள் அவசர சிகிச்சைகள் அளிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

கொழும்பிலிருந்து ரயிலில் வருகையில் தாக்குதல்களுக்குள்ளான பிரயாணிகளில் பலர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

T. சதாசிவம், முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

வழக்காளி

எதிராக

வழ. இல. M B 1963

1. செல்லையா பெண் யோகாம்பாள்
2. S. செல்லையா, தனியூற்று, முல்லைத்தீவு.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 1963-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1977-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9-ந் திகதி 19-9-77 திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 1560/-ம் 12-12-57 தொடக்கம் 10-7-58 வரைக்கும் ரூபா 1000/-க்கு 18 வீத வட்டியும் அதற்குப் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 214-72.

### ஆதன விபரம்

இலங்கை வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோப்பாய் கோவிற்பற்று மானிப்பாய் இறை உறுதிப்படி கொற்றம்பனையும் கொற்றயடியும் நி.பர.7 3/4 இலசுட்மி கட்டிடம் என்று அழைக்கப்படும் கல்வீடும் அதற்குள்ளிருக்கும் வேறு கட்டிடங்களும்; கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை முகப்பும் V. அரியகுட்டியும் பெண் அளகம்மா இப்போது N. துரைரத்தினத்துக்கும் குடும்பத்துக்குமுரிய ஆதனம், வடக்கு V. அரியகுட்டிக்கும் பெண் அளகம்மாவுக்கும் தற்போது துரைரத்தினத்துக்கும் பெண்சாதிக்குமுரிய ஆதனம். மேற்கு S. கனகரத்தினத்தின் உரிமைக்காரருக்கு தற்போது Dr. S. பொன்னுச்சாமிப்பிள்ளையின் ஆதனம் தெற்கு A. சுவாமிநாதபிள்ளைக்கு தற்பொழுது நன்னித்தம்பி செல்லம்மாவின் உரிமைக்காரரின் ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசி.

S.சங்கரப்பிள்ளை J.P.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

'வேல்பதி'
புத்தூர்.
9-8-77

6866

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் மாவட்டக்கோடு

1. செல்லையா தம்பிராசாவும்.
2. பெண் இராசம்மாவும், புன்னாலைக்கட்டுவன்.

இல. ஈடு.13880

வழக்காளிகள்

எதிராக

இறந்துவிட்டார். தவசி கந்தன் அச்செழு (தானாகவும் காலஞ்சென்ற அச்செழு தவசி தம்பனின் சொத்துக்களின் சட்ட முறைப்படி பிரதிநிதியாகவும்)

1. கந்தர் வேலாயும்-அச்செழு (இவர் காலஞ்சென்ற தவசி தம்பனினதும் தவசி கந்தனினதும் சொத்துக்களின் சட்டப் பிரதிநிதியாக)
2. கந்தர் சண்முகலிங்கம்
3. கந்தர் நல்லலிங்கம்-இருவரும் அச்செழு,

எதிராளிகள்

மேற்கூறிய வழக்கில் கிடைத்த அதிகாரப்படி கீழேவிபரிக்கப்படும் ஆதனம் 1977-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ந் திகதி (30-9-77) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதலும் வட்டியுமாக 2638/33 இன்னும் 1973 ஆனி 8ந் திகதி தொடக்கம் 2000/- ரூபாவிற்கும் 10 வீத வட்டியும் கூட்டிமுழுப்பணம் இறுக்கும் வரைக்கும் கோட்டுச் செலவு 920/84 சதமும் (நடைபெற்ற செலவு 706/62 நடைபெற வேண்டியது 108/57 சமயாசமயச் செலவு 105/65) இதில் கோட்டில் கட்டிய ரூபா 3122/32 சதம் போக மிகுதி

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் கிழக்குப்பகுதி, புத்தூர்கோவிற்பற்று அச்செழு இறை 'தாளையப் புலம்' நில. பர. 20½ வீடுகள் கிணறு செய்பயிர் வான்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு கதிரன் நாகமுத்துவினுதனம். வடக்கு ஒழுங்கை,மேற்கு ஐயன்முருகனுக்கும் பங்காளருக்கும் உரிய வாதனம், தெற்கு ஐயன்முருகனுக்கும் பங்காளருக்கும் இராமலிங்கம் கைம்பெண் சின்னாச்சிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனங்கள் இவ்வெல்லைப்படி இதடங்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு ஒன்பதும் [9] அதற்குச் சேர்ந்தவைகளும்.

தா. க. பொன்னுத்துரை J. B.
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

"அகிலகம்"
28/1, யாழ். ரோட்,
யாழ்ப்பாணம்.
10-8-77

6870

# கிழக்கிலும் தெற்கிலும் இரண்டு வளாகங்கள்

## கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, புதன்

கிழக்கு மாகாணத்தில் விரைவில் ஒரு பல்கலைக்கழகவளாகம் அமைக்கப்படும்.

இத்தகவலைக் கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன தெரிவித்தார்.

தெற்கு மாகாணத்திலும் ஒரு வளாகம் நிறுவப்படஉள்ளதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

உத்தேச இரு வளாகங்களும் அமைப்பதற்கான ஏற்பாடுகள் யாவும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அமைச்சர் கூறினார். (இ)

## சோலைவரி அறவிட வழக்கு

வேலணை, புதன்

வேலணைகிராமச்சபை தனது எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு சோலைவரிகள் கட்டத் தவறியவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்திருக்கின்றது. இவ்வழக்குகள் கிராமசபையின் அதிகாரங்களுக்குட்படவே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (அ)

## நயினாதீவுக்கு இரு கி.சேவகர்கள்

வேலணை,புதன்

ஒரு கிராம சேவையாளருடன் இயங்கி வந்த நயினாதீவுக் கிராமசபைப் பகுதி இப்போது நயினாதீவு வடக்கு, நயினாதீவு தெற்கு என இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு இரு கிராம சேவையாளர்கள் கடமையாற்றி வருகின்றனர். (அ)

## இன்றைய வானொலி நிகழ்ச்சிகள்

6-05 சைவநற்சிந்தனை எஸ். திருநாவுக்கரசு, 6-10 இஸ்லாமியநற்சிந்தனை, 6-50 பஜனை, 7-05 இசைக்கோவை, 7-35புல்லாங்குழல் எ. நமசிவாயம், 8-05 வாத்தியவிருந்து.

மாலை 6-20 வாத்தியஇசை, 6 30 மழலைச்செல்வம் நடத்துபவர் இந்திராணி தாமோதரம்பிள்ளை, 6-45 இசைப்பயிற்சி எ. கே கருணாகரன், 7-02 கமமும் புலமும் பயிர்களின் நோய்கள் கமத்தொழில் திணைக்கள தகவற்பிரிவினர் அளிக்கும் நிகழ்ச்சி, 7-15 மகளிர்அரங்கு நடத்துபவர் அன்னலட்சுமி ராஜதுரை, 7-35 மெல்லிசைப் பாடல், 7-50 பேச்சு கலாயோகி ஆனந்தகுமாரசாமி 3 பிறநாடுகளில் ஆற்றிய பணிகள், எஸ். அம்பிகைபாகன், 8-02 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-05 திருக்கூர்ஆன்விளக்கம் 8-20 மணிமொழிகள், 8-30 கிருஅத். 8-35 கஸீ ததுல் ஹம்ஸியா, 8-45 அஸ்மாஉள் ஹீஸ்னா, 9-30 அறிவியல் அரங்கு, 10-00 மெல்லிசை வாத்தியவிருந்து,10-30பாட்டு, எம். எஸ். சுப்புலக்ஷ்மி, (முஸ்லிம் நிகழ்ச்சி நேரம் மன்றத்துக்குரியன).

## அரசின் கொள்கை பிரகடனம்: இன்று விவாதம் ஆரம்பம்

(கொழும்பு)

தேசியஅரசுப்பேரவைஇன்று பி. ப. 2 மணிக்கு கூடுகிறது.

இலங்கைக் குடியரசின் இரண்டாவது தேசிய அரசுப் பேரவை கடந்த 4-ந் தேதி சம்பிரதாய பூர்வமாக கூடிய போது ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசின் கொள்கைவிளக்க அறிக்கைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் இன்று ஆரம்பமாகும்

அரசின் கொள்கை விளக்க உரைக்கு தமிழர்விடுதலைக்கூட்டணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன திருத்தங்கள் சமர்ப்பித்துள்ளன.

### கூட்டணியின் திருத்தம்

ஜனாதிபதி அவர்களால்விடுக்கப்பட்ட அரசின் கொள்கை விளக்க உரை,புதியகுடியரசின் அரசிலமைப்பு ஒன்றை வரைந்து, அங்கீகரித்துச் செயற்படுத்துவதற்கென அரசாங்கத்துக்கு அளிக்கப்பட்ட மக்களாணையைப் பற்றிக் குறிப்பிடும் அதே வேளையில், ஒரு சுதந்திர இறைமையுள்ள, மதச்சார்பற்ற, சமதர்ம தமிழ் ஈழக்குடியரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வதற்கு தமக்குதமிழ ஈழமக்கள் அளித்த மக்களாணை பற்றி வேண்டுமென்றே குறிப்பிடவில்லையென தமிழர் விடுதலைக் கூட்டணி கவலை தெரிவித்து, திருத்தப் பிரேரணை ஒன்றைச்சமர்ப்பித்துள்ளது.

திருத்தப்பிரேரணை முழுவிபரம் வருமாறு:

(அ) இலங்கையின் வடக்கு, கிழக்குப்பாகங்களில் தனியான வரையறுக்கப்பட்ட பிரதேசங்களில் பாரம்பரியமாக வசித்து வருவதாலும்,

(ஆ) ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களினால், வெற்றிகொள்ளப்படும்வரை பல நூற்றுண்டுகளாக தனியான இறைமையுள்ள மக்களாக வாழ்ந்துவந்த வரலாற்றாலும்,

(இ) புராதனப் பெருமை வாய்ந்தமொழிக்கும், கலாச்சாரத்திற்கும், நாகரிகத்திற்கும் பொதுச்சொந்தக்காரராக இருப்பதாலும்,

(ஈ) தமதுபிரதேசத்தின்விவசாய கடற்றொழில் முதலிய மூல வளங்களை அடிப்படையாகக் கொண்டபொதுதனபொருளாதார வாழ்க்கையுடைய மக்களாக இருப்பதாலும்,

(2)தமது 'தனித்துவத்தைக் காத்து ஒன்றுபட்டு தேசிய இனமாக வாழதாம் பூண்டிருக்கும் உறுதியை நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்திருப்பதாலும் இந்நாட்டு தமிழ் மக்கள் உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட எல்லா வரைவிலக்சணங்களின் படியும் சுயநிர்ணய உரிமைக்கு மறுக்க முடியாத உரித்துள்ள ஒரு தனித்சேதய இனம் என்பதை அரசு கவனத்திற் எடுக்கத் தவறிவிட்டது.

மேலும், இச் சுய நிர்ணய உரிமையை உபயோகித்து முரண இறைமையுள்ள தமிழ் ஈழ அரசியல் சுதந்திர மக்களால் தீர்மானித்து விட்டார்கள் என்பதை அரசு எவ்வகையிலும் காட்டத் தவறிவிட்டது. (ம)

### பருத்தித்துறை டிப்போவுக்கு

## இம்மாத முடிவுக்குள் 30 பஸ்கள்

உடுப்பிட்டி, புதன்

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவிற்கு இம்மாத இறுதிக்குள் முப்பது பஸ் வண்டிகள் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த ஐக்கியதேசியக்கட்சித்தொழிற் சங்கமான ஜாதிக சேவா சங்கமயத் தலைவர் திரு. கே. எஸ். ஆறுமுகம் தெரிவித்தார்.

திரு. கே. எஸ். ஆறுமுகம் இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. ஏ. ஆர். பி. விஜயசேகராவுடன் பேச்சு வார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து இ. போ. ச. தலைவர் பருத்தித்துறை டிப்போவிற்கு 30 பஸ்களை அனுப்பி வைப்பதாக உறுதியளித்துள்ளார்.

ஏற்கனவே பருத்தித்துறை டிப்போவில்நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்குக் காரணமான 'சப்பல்' ரகப் பஸ்வண்டிகள் இங்கு அனுப்பிவைக்கப்படமாட்டாதென்றும் இ. போ.ச. தலைவர் திரு. ஆறுமுகத்திடம் தெரிவித்துள்ளார்.

## செப். 12ல் பொத்துவில் இடைத் தேர்தல்

(கொழும்பு)

பொத்துவில் தொகுதியின் இடைத்தேர்தல் அடுத்த மாதம் 12ம் திகதி நடைபெறும்.

கடந்தமாதம் 21ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது இத் தொகுதியில் போட்டியிடுவதற்கு நியமனப்பத்திரம் தாக்கல் செய்திருந்த சுயேட்சை வேட்பாளர் திரு. அல்பேர்ட் சரணபாலா விபத்தொன்றில் காலமானதை அடுத்து இத்தொகுதி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யும் இறுதி நாளான நேற்று புதிதாக எவரும் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்யவில்லை. இத் தொகுதியில் போட்டியிடுவோர் விபரம்:

திரு.எம்.கனகரத்தினம் (த.வி.கூ), டாக்டர் எம்.ஏ எம். ஜவால் டீன்(ஐ தே.க), ஜனாப் எம் எம்.முஸ்தபா(சு.க), திரு. எம்.தர்மலிங்கம் (சுயேச்சை), எஸ். எல். அப்துல்சத்தார் (சுயேச்சை), திரு.டி.எம்.எஸ். ஜனநாயகா, திரு எஸ். எம். மௌலானா.

இரட்டை அங்கத்தவர் தொகுதியான பொத்துவிலில் 49,691 வாக்காளர்கள் உள்ளனர். (இ)

## தீவுப்பகுதியில் விவசாய விழா

வேலணை, புதன்

தீவுப்பகுதியில் மாபெரும் விவசாயவிழா வொன்றினை நடத்த தீவுப்பகுதி விவசாயப் போதனாசிரியர் திரு. க. சிவக்கொழுந்து முன்வந்திருக்கின்றார்.

இவ்விவசாய விழாவில் முக்கியமாக தீவுப்பகுதியில் உற்பத்திசெய்யப்பட்ட விவசாயப் பொருட்கள் காட்சிக்குவைக்கவும், தீவுப்பகுதியில் நடைபெற்ற வீட்டுத்தோட்டப் போட்டியில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# காங்கிரஸ் நிதியிலிருந்து 6 கோடி ரூபா மோசடி!

## இந்திராவின் செயலாளர் உட்பட 8 பேர் மீது குற்றச்சாட்டு

புதுடில்லி, ஆக. 17

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதிஇந்திராகாந்தியின்மேலதிகச் செயலாளராக இருந்த திரு.தவன் உட்பட8பேர் காங்கிரஸ் கட்சியின் நிதியிலிருந்து 6 கோடி ரூபாவுக்கும் அதிக தொகையை வர்த்தக நிறுவனங்களில் முதலீடு செய்தனராம்.

இந்திய மத்திய புலனாய்வுத் துறைப் பொலிசார் இந்த மோசடியைக் கண்டுபிடித்துள்ளனர்.

இரண்டு ஆண்டு காலத்தில் பல நிறுவனங்களில் இந்தப் பணம் முதலீடு செய்யப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர். இவர்கள் 8 பேரும் பலபோலி கம்பனிகளை நடத்தி வந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் காங்கிரஸ் நிதியிலிருந்து 34 லட்சம் ரூபா அச்சுவேலைகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக 10 பேர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ)

### 500 யுத்தக் கைதிகளை இந்தியா விடுவிக்கும்

புதுடில்லி, ஆக.17

இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் யுத்தக்கைதிகளில் 500 பேரை விடுவிக்க இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

இக்கைதிகளை ஏற்றுக் கொள்ள பாகிஸ்தான் அரசு ஏற்பாடுகளைச் செய்து முடித்த பின்னர் இவர்கள் விடுவிக்கப்படுவர் என இந்திய அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், வியா

புங்குடுதீவு மகாவிஷ்ணு ஆலய மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26ந்திகதிதேர்த்திருவிழாவும், 27ந் திகதி தீர்த்தமும் நடைபெறும். உற்சவ காலங்களில்சமயச்சொற்பொழிவுகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நாரந்தனை தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆலய மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 28ந் திகதி தேர்த்திருவிழாவும் 29ந் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (கெ-இ)

## திராவிடக்கழகம் அரசியல் கட்சியாகும்

சென்னை, ஆக.17

'தமிழ்நாடு திராவிடக் கழகம்' அரசியல் கட்சியாக இயங்கத் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் சிதம்பரத்தில் நடைபெற்ற திராவிடக்கழகத்தின் இரண்டு நாள் மகாநாட்டிலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

மாநகரசபை தேர்தல்களில் போட்டியிடவும் கழகம் தீர்மானித்துள்ளது. (இ)

## அரசியல் சாஸன திருத்தம்: அமைச்சர்கள்குழு ஆராயும்

புதுடில்லி, ஆக. 17

நெருக்கடிநிலை அமுலிலிருந்தபோது திருத்தம் மேற்கொள்ளப்பட்ட இந்திய அரசியல் சாஸனத்தின் 42வது திருத்த மசோதாவைநீக்குவதுதொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக நான்கு அமைச்சர்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங், சட்ட அமைச்சர் திரு. சாந்திபூஷண், செய்தி ஒலிபரப்புஅமைச்சர் திரு.எல். கே. அட்வாணி, கல்வியமைச்சர் திரு. பிரதாப்சந்தர்சுந்தர் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (இ)

## கிரிக்கட்சாம்பல்கிண்ணத்தை இங்கிலாந்து கைப்பற்றியது

லண்டன், ஆக 17

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற நான்காவது டெஸ்டில் இங்கிலாந்து கோஷ்டிஒருஇன்னிங்ஸ் 85 ஒட்டங்களால்வெற்றிபெற்றது.

இவ்வெற்றியின் மூலம் 5 டெஸ்ட்தொடரிலும்வெற்றிபெற்ற இங்கிலாந்துக்கோஷ்டி 'சாம்பல் கிண்ணத்தை'யும் தமதாக்கிக்கொண்டது.

இந்தடெஸ்டில் இங்கிலாந்து ஆரம்ப துடுப்பாட்ட வீரர் போய்கொட் 191 ஒட்டங்களைப் பெற்று ஒரு சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இங்கிலாந்து தன் முதலாவது இன்னிங்ஸில் ஆரம்ப முதல் ஆடிய இவர் இறுதியில் தமது விக்கெட்டை இழந்தார்.

ஸ்கோர் விபரம்: இங்கிலாந்து முதல் இன்னிங்ஸ்436, ஆஸ்திரேலியா 103, 248.(இ)

### மணிக்கூடு மீண்டும் இயங்குகிறது!

யாழ்ப்பாணம், வியா

யாழ். நகர் மத்தியில் நிமிர்ந்து காணப்படும் மணிக்கூட்டுக் கோபுரத்தில் உள்ள மணிக்கூடு திருத்தப்பட்டு மீண்டும் வழமைபோல் இயங்குகின்றது.

யாழ். மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. க. சிவஞானத்தின் உத்தரவின்பேரில் மாநகரசபை ஊழியர்களின் தீவிரமுயற்சியினால் மணிக்கூடு திருத்தப்பட்டு இப்போது நான்குபக்கங்களும் சரியாக இயங்குகின்றது. (கு-இ)

### எல்விஸ் பிரஸ்லி காலமானார்

வாஷிங்டன், ஆக.17

அமெரிக்க பிரபல பொப் பாடகர் எல்விஸ் பிரஸ்லி நேற்று காலமானார்.

இறக்கும்போது இவருக்கு வயது 42.

உலகெங்கும் உள்ள இசைப்பிரியர்களை தமது 'பொப்' பாடல்களினால் கவர்ந்த எல்விஸ்பிரஸ்லி உலகப்புகழ் பெற்று விளங்கினார். (இ)

### பூங்கா புனரமைப்பு

யாழ்ப்பாணம், வியா.

யாழ். சுப்பிரமணிய பூங்காவில் பழுதடைந்திருந்த சில பகுதிகள் மீண்டும் திருத்தியமைக்கப்படுகின்றன.

யாழ். மாநகரசபை ஊழியர்கள் இப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இத்திருத்தவேலைகளை துரிதகதியில் செய்யுமாறு விசேட ஆணையாளர் பணித்துள்ளார். (கு-இ)


RIO (யாழ்ப்பாணம்)
புதிய இயந்திரம் பொருத்தப்படவிருப்பதால் மறு அறிவித்தல் வரை காட்சிகள் காண்பிக்கப்படமாட்டா.

REGAL (JAFFNA) Daily: at 4-45 7-00 & 9-30 p. m;
Adventure & Excitement for the Whole Family!
CHARLTON HESTON
in
CALL OF THE WILD
(Color)

வெலிங்டன் [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன்: 7698 [யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

ராஜா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள் போன்: 7180
முத்துராமன் - சுஜாதா
விஜயகுமார் - படாபட் ஜெயலக்ஷ்மி
நடித்த
மயங்குகிறாள் ஒரு மாது

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - லதா - நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
இன்று மட்டும் நடித்த
பட்டணத்தில் பூதம்
(கறுப்பு - வெள்ளைப் புதிய பிரதி)
நாளை முதல்
சிவகுமார் சுஜாதா
அன்னக்கிளி

வின்ஸர் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா

சத்யம்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
அசோகன் - வசந்தா
கார்த்திகை தீபம்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஆதித்தன்-கே. ஆர். விஜயா
தாயும் மகளும்

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஏ.வி.எம் ராஜன்-பானுமதி
பத்துமாதபந்தம்

சாந்தி யாழ். நகர் போன்: 7642
நாகேஸ்வரராவ் ரேலங்கி அஞ்சலிதேவி ரங்கராவ்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
செஞ்சுலக்ஷ்மி

ராணி [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி
(புதிய பிரதி)

ஈழநாடு
THE ELANADU

# ரயில் பஸ்சேவை பாதிப்பு

நேற்றுமுன்தினம் பாதிக்கப்பட்ட பஸ் சேவைகள் இன்னும் சீராகவில்லை. பஸ்சேவைகள் இன்றும் நடைபெறமாட்டாது எனத்தெரியவருகிறது.

யாழ் பஸ்நிலையம் வெறிச்சோடிக்கிடக்கிறது. பிரயாணிகள் மட்டும் அடிக்கடி பஸ்நிலையத்துக்குவந்து, பஸ்கள் இல்லாத வெறும் 'நிலையத்தை' மட்டும் பார்த்து பெருமூச்சு விட்டுச்செல்கின்றனர்.

அதிகமானவர்கள் தூர இடங்களிலிருந்துநேற்று 'நடைபவனி'யாக வந்து யாழ்.நகரின் 'கோலத்தை' பார்த்துச்சென்றனர்.

பாடசாலைகள் நேற்றும் மூடப்பட்டிருந்தன. அரசாங்க அலுவலகங்கள் இயங்கவில்லை. நேற்று முன்தினம் மூடப்பட்ட கடைகள் நேற்றும் மூடப்பட்டிருந்தன. ஓரிரு தேநீர்க்கடைகள் மட்டும் பொதுமக்களின் நன்மை கருதி திறந்திருந்தன.

## ரயில் எதுவும் ஓடாது

ரயில்சேவைகளைப் பொறுத்தவரை. நேற்றுமுன்தினம் நடைபெற்ற வழமையானசேவைகள் நேற்று நடைபெறவில்லை.

மறு அறிவித்தல்வரை ரயில் சேவைகள் நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டது.

நேற்று இரவு கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, காங்கேசன்துறையிலிருந்து எந்த இடத்திற்கும் ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படமாட்டாது தூர இடங்களுக்கோ அல்லது அண்மையிலுள்ள இடங்களுக்கோ ரயில்சேவைகள் எதுவும் நடைபெறமாட்டாது.

## பரந்தன் ஊழியர்கள்

பரந்தன் இரசாயனக்கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்று ஒருநாள்வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

'யாழ். நகரில் பொலிஸார் மேற்கொண்ட அட்டூழியங்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்'என்று கண்டனம் தெரிவித்து, இந்த ஊழியர்கள் வேலைநிறுத்தத்தை நேற்று மேற்கொண்டனர்.

## சிறப்பான பஸ்சேவை

நேற்றுமுன்தினம் பஸ்சேவைகள் நிறுத்தப்பட்டபோதிலும் இடைசிநேரத்தில் நடைபெற்ற பஸ்சேவைகள் பலரின் பாராட்டையும் பெற்றுள்ளது.

யாழ்.நகரில் திடீரென ஏற்பட்ட கொந்தளிப்பைத் தொடர்ந்து தடுமாறிய பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த குறிப்பாக மாணவிகளையும், மாணவர்களையும் அவர்கள் சேரவேண்டிய இடங்களுக்கு பஸ்ஸில் அழைத்துச் சென்று சேர்த்தமை பெரிதும் பாராட்டக்கூடியது என்று பெற்றோர் நன்றிதெரிவித்துள்ளனர்.

இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை, பஸ்சேவை நிறுத்தத்தில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. இன்றும் வழமையான பஸ்சேவைகள் நடக்காது எனத் தெரியவருகிறது.

## மரண அறிவித்தல்

### -ஆனந்தவேல்-

சண்முகராசா, கைலாசபதி ஆகியோரின் அன்பு மகனும் கமலாதேவி, ஜெகதீஸ்வரராசா (வைரமாளிகை), விஜெந்திரராசா, இந்திரகுமார் (உமா ஸ்ரோர்ஸ்), வாலாம்பிகை, கைலாசநாதன், உமாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மு. இராமானந்தன் (ஆர்-வி-டி-பி, எம்பிலிபிட்டிய), நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனருமான ஆனந்தவேல் (குமாரசாமி பிடவை மாளிகை) 16-8-77ல் அகால மரணமடைந்துவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-8-77 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். எஸ்.ஆர். சண்முகராஜா, 187/8, கில்னர் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். 6872

## மரண அறிவித்தல்

### செல்வன் பா. பாக்கியராசா [ரவி]

செல்வன். பா. பாக்கியராசா அகால மரணமாகிவிட்டார். இவர் திரு. பொ. பாலசிங்கம் (உரிமையாளர் விமலா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) திருமதி யோகம்மா பாலசிங்கம் தம்பதிகளின் புதல்வனும், பா. பாலசுப்பிரமணியம், பா. பாலச்சந்திரன், திருமதி காந்திமதி சிவராசா, செல்விகள்: சாந்திமதி, ரதிமதி, வசந்தமதி, ஆகியோரின் சகோதரனும் திரு.கே. சிவராசா [கச்சேரி யாழ்ப்பாணம்]வின் மைத்துனரும், திரு. சி. விசுவரத்தினம் [நில அளவையாளர்] திரு. சி. சற்குருநாதபிள்ளை (தபாலதிபர்) ஆகியோரின் மருமகனும் திருமதி செல்லம்மா சின்னையாவின் பேரனுமாவர். அன்னாரின் பூதவுடல் 18-8-77 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் வடக்கு விநாயகர் வீதி இல்லத்திலிருந்து ஈமக்கிரிகைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 6873

## யு. என். பி. அமைப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களை நேரில்வந்து பார்வையிடுமாறுஐக்கியதேசியகட்சியின் யாழ்ப்பாண பிரதம அமைப்பாளர் திரு. பொ. கனகசபாபதி பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. ரி. பி வெரப்பிட்டியாவை அழைத்துள்ளார்

இவ்வன்செயல் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் திரு ஜே. ஆர். ஜயவர்த்தன. வெளிநாட்டு அமைச்சர் ஜனாப் ஏ. சி எஸ். ஹமீத், நீதி அமைச்சர் திரு. தேவநாயகம், போக்குவரத்து அமைச்சர் திரு. எம். எச். மொகமட் உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா, உதவி சபாநாயகர் ஜனாப் பாக்கீன் மாக்கார், திட்டமிடல் பொருளாதார பிரதிஅமைச்சர் ஜனாப் எம்.எச் எம். நயினா மரிக்கார் ஆகியோருடன் தாம் தொடர்புகொண்டதாகவும் அவர்கள் இதுபற்றி உடன் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளனர் என்றும் திரு கனகசபாபதி கூறினார்.

## நேற்றுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பவரும், யாழ்ப்பாணம், முஸ்லிம் கல்லூரி வீதி. 45ம் இலக்கத்தைச் சேர்ந்த நவாஸ் என்பவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### தீ வைப்பு

நேற்று முன்தினம் முத்திரைச் சந்தையிலுள்ள கல்வி இலாகாவில் ஒரு கார் இனந்தெரியாவர்களால் தீவைக்கப்பட்டது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட உத்தரதேவி கடுகதிப் புகையிரதம் பரந்தனில், யாழ்ப்பாணத்திற்குத் திருப்பி விடப்பட்டபோது ஒரு பெட்டியில் யாரோ தீ வைத்துவிடவே பிரயாணிகள் தீயை அணைத்தனர்.

### மற்றுமொருவர் பலியானார்

நேற்றுப் பிற்பகல் யாழ். நகரில், சிவன்கோவிலடியில் ஒரு கடைக்குத் தீவைக்கப்பட்டது. அதை அணைப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவர் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார். பின்னர் இராணுவத்தினர் வந்து தீயை அணைத்தனர்.

### கொடியைப் பறித்தனர்

பண்டிதர் இரத்தினம், திருவாளர்கள் வி. தர்மலிங்கம், அ. அமிர்தலிங்கம், தா. திருநாவுக்கரசு ஆகியோர் திரு. தா. இராஜலிங்கத்தின் மோட்டாரிக் காரில் சென்றுகொண்டிருந்தபோது, வழியில் பொலிஸ் கோஷ்டியொன்று தடுத்து நிறுத்திக் காரைச் சோதனையிட்டதுடன், காரில் இருந்த கொடியையும் அகற்றியதாகவும் கூறப்படுகிறது. (கா-கெ-கூ)

## நிலைமை திருந்தும்வரை வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். ஆஸ்பத்திரியில் கடமைபுரிவோருக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கும்வரை தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்வதென்று ஆஸ்பத்திரியில் கடமைபுரிவோர் சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

யாழ். குடாநாட்டில் நடைபெற்றுவரும் பொலிஸ் அட்டூழியங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவும் யாழ். ஆஸ்பத்திரிக்குள் ஆயுதந் தாங்கிய பொலிசார் புகுந்து காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கவிடாது தடுத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்ததற்கு ஆட்சேபம் தெரிவிப்பதற்காகவும் இவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

இந்த அட்டூழியங்களுக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸ் அதிபரையும், பொலிஸ் ஊழியர்களையும் உடனடியாக யாழ் குடாநாட்டைவிட்டு அகற்றவேண்டும் என்றும் இவர்கள் கோரியுள்ளனர்.

யாழ். வைத்திய அதிகாரிகள் சங்கம், தாதிமார்சங்கம், மருந்தாளர்சங்கம், மருத்துவ ஆய்வுகூடவல்லுனர்சங்கம்பிசியோதிரப்பீவ் சங்கம், எச்ஸ்கதிர் வல்லுநர் சங்கம், வைத்திய சாலை லிகிதர் சங்கம், மருத்துவ மாதர் சங்கம், சுகாதார இலங்கை தொழிலாளர் சங்கம் இலங்கை சனிஷ்ட சுகாதார சங்கம். தேசீய சுகாதாரத் தொழிலாளர் சங்கம், ஆகியவை நேற்றுமாலைகூடி மேற்கண்ட முடிவைஎடுத்தன.

பொதுமக்களின் பாதுகாப்புக்குவேண்டிய பூரண பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யும்படியும் இவர்கள் கோரியுள்ளனர்.

### அரச ஊழியர்கள்

பொலிஸ் அட்டூழியங்களை ஆட்சேபித்து, அரசாங்க லிகிதர் சங்கம், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், ராஜ்ய பொது சேவக்க கம்கரு சங்கமய ஆகிய சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளன.

நிலைமை திருப்திகரமாக தீர்த்துவைக்கப்படும் வரையில் யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க காரியாலங்களில் இச்சங்க ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### கூட்டுக் கமிட்டி கோரிக்கை

பொலிஸ் அட்டூழியங்கள் [2-ம் பக்கம் பார்க்க]

## தரப்படுத்தல்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டது.

நிர்வாக அதிகாரம் உள்ள ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கும், தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் அல்லாதவர்களையும் மந்திரிகளாக நியமிக்கக்கூடியதான அமைச்சரவை ஒன்றை உருவாக்குவதற்கும் இந்த அரசியல் திட்டத் திருத்தம் உள்ளடக்குவதாக இருக்கும்.

அரசியல் சட்ட மாற்றங்கள் பற்றித் தேசிய அரசுப் பேரவைத் தெரிவுக் குழு ஒன்று ஆராய்ந்து சிபாரிசுகளைச் செய்யும்,

தேசிய அரசுப் பேரவை வளவுக்குள் காலஞ்சென்ற டட்லி சேனநாயகா, எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயகா ஆகியவர்களின் ,சிலைகளை நிறுவதென்றும் மந்திரிசபை முடிவுசெய்தது.

பொரளையிலுள்ள காசில் வீதியை டட்லி சேனநாயகா வீதியெனப் பெயர் மாற்றவும் தீர்மானிக்கப்பட்டது.

## சொந்த இடங்களுக்கு சென்றனர்

யாழ்ப்பாணம். வியாழன்

யாழ்ப்பாணப் பகுதியில் வசித்துவந்த தென்னிலங்கையைச் சேர்ந்த பல குடும்பங்கள் பாதுகாப்புடன் விசேஷ பஸ்களில் தென்னிலங்கையிலுள்ள தங்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

யாழ். வளாகத்தில் கல்வி கற்றுவந்தவர்களும் பாதுகாப்பாக அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

......

## அமைதியாக—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### பிரதிப் பொலிஸ்மா அதிபர்மேற்பார்வையில்

வட பிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. அனே செனிவிரத்ன, யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து நிலைமைகளைக் கவனித்து மேற்பார்வை செய்துவருகின்றார். இராணுவப். கடற்படை, பொலிஸ், ரோந்து நடவடிக்கைகளிலும், கேந்திர நிலையங்களிலும் காவல் புரிந்துவருகின்றன.

யாழ்ப்பாணத்தில் தற்போதைய நிலைமையைக் கவனிப்பதற்குப் பொறுப்பை ஏற்றிருந்த அநுராதபுரம் பொலிஸ் அதிபர் திரு. லியனகே, அங்கு தோன்றியுள்ள நிலைமை காரணமாக அநுராதபுரம் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.

—

## மரண விசாரணை இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம்,வியா.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்போது பலியானவர்கள் மீதானமரண விசாரணை இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். நீதவான் முன்னிலையில் நடைபெறும்.

இச்சம்பவத்தின்போது பலியானவர்கள் விபரம் வருமாறு: [1]சண்முகராசா ஆனந்தவேல் கில்னர்லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். [2] பாலசிங்கம் பாக்கியராஜா விநாயகர் வீதி,நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம். மூன்றுவது நபர் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. இம்மரண விசாரணை நேற்று யாழ். நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்டவைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்படாததால் இன்றுவரை விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

நேற்றைய விசாரணையின்போது இறந்தவர்கள் சார்பில் சட்டத்தரணி திரு.வி.என்.நவரத்தினம், சட்டத்தரணிகள் திருவாளர்கள்: இ. விஸ்வநாதன், ஜிம்மி ராஜரட்ணம், ஏ. அன்ரனி, எஸ். கனகசபாபதி, கே. கேசவன், கே. துரைரத்தினம், செல்வி வி. தளையசிங்கம், வி. சற்குணநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராகினர்.

இன்று நடைபெறுகின்ற விசாரணை, துப்பாக்கிச் சூட்டினால் இறந்தவர்கள் சம்பந்மாகவே நடைபெறுவதால் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை நேரடியாகப் பார்த்தவர்கள் யாழ்ப்பாண நீதிமன்ற நீதவான் முன்னிலையில் சாட்சியமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சம்பவங்களைப் பார்த்தவர்கள் சாட்சியமளிக்கும் பட்சத்தில் அவர்களுக்குப் பூரண பாதுகாப்பளிக்கப்படும் என்றும் உண்மை நிலையை நீதிமன்றத்திற்கு உணர்த்தும் பொருட்டு இவர்களது சாட்சியங்கள் மிக அவசியம் என்றும் சட்டத்தரணி விஸ்வநாதன் தெரிவித்தார். (கா-கூ)

## பன்னாலை விநாயகர் உற்சவம்

யாழ்ப்பாணம்,புதன்

தெல்லிப்பளை- பன்னாலை வரத்தலம் கற்பகப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் அடுத்தமாதம் 2ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 12 தினங்கள் நிகழும் மகோற்சவத்தில் 12ம் திகதி இரதோற்சவமும் 13ம் திகதி தீர்த்தோற்சவமும் 15ம் திகதி வைரவர் பொங்கலும் இடம் பெறும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.